# அரசு கல்லூரி மாணவிகளுக்கு மெட்ரோ ரெயிலில் இலவச பயணம்

## மெட்ரோ ரெயில் நிர்வாகம் அறிவிப்பு

சென்னை, செப்.5–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

அரசு பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் மெட்ரோ ரெயிலில் மாணவ–மாணவிகளை இலவசமாக அழைத்து செல்கிறது. மெட்ரோ ரெயிலின் அனைத்து வழித்தடத்திலும் அவர்கள் அழைத்து செல்லப்பட்டு வருகின்றனர். பயணத்தின் போது அவர்களின் சந்தேகங்களுக்கு மெட்ரோ ரெயில் பொறியாளர்கள் விளக்கம் அளிக்கின்றனர்.

பொதுகல்விக்கு சமமாக மாறுபட்ட கற்றல் தேவைகளைக் கொண்ட குழந்தைகளும் இருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதற்காக மெட்ரோ ரெயில் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு அளிக்கப்படுகிறது. அந்த வகையில் கடந்த மாதத்தில் 4 ஆயிரத்து 850 மாணவர்கள் மெட்ரோ ரெயிலில் அழைத்து செல்லப்பட்டனர்.

கடந்த ஆண்டு 31 ஆயிரத்து 178 மாணவ, மாணவிகள் அழைத்து செல்லப்பட்டு உள்ளனர். பள்ளி மாணவர்களைப் போல் அரசு மகளிர் கல்லூரி மாணவிகளும் மெட்ரோ ரெயிலில் இலவசமாக அழைத்து செல்லப்பட உள்ளனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.